செயற்பொறியாளர் அலுவலகம், பொபது., நீஆது.,தரக்கட்டுப்பாடு கோட்டம், விழுப்புரம்

**முன்னிலை:** பொறி.S.லெனின் பிரான்சிஸ், B.E.,
செயற்பொறியாளர்,பொபது.,நீஆது.,

**செ.மு.எண். 529/நிஎ.1/2021/நாள்: 02.11.2021**

பொருள்: பணியமைப்பு - த.நா.அ.ப.தொகுதி - தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பட்ட 2018-2019 மற்றும் 2019-2020-ம் ஆண்டுகளுக்கான ஒருங்கிணைந்த குடிமைப் பணிகளுக்கான தேர்வு தொகுதி IV-ல் தேர்வுசெய்து பணி நியமன ஆணை வழங்கப்பட்டு செல்வி.G.அருள்ஜோதி (பி.தே:25.06.1992) இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்தது இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்தும் தகுதிகாண் பருவம் துவக்கியும் ஆணை வழங்குதல் - தொடர்பாக

பார்வை:
1. செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை கடித எண்.2496/PSD-I/2020/நாள்:29.05.2020.
2. முதன்மை தலைமைப்பொறியாளர், நீஆது., மற்றும் தலைமைப்பொறியாளர், (பொது) பொபது., சென்னை-5 அவர்களின் செயல்முறை ஆணை எண்.எஸ்.3(3)35935/2020/ நாள்:17.09.2020.
3. தலைமைப்பொறியாளர், (ம) இயக்குநர், நீர் ஆய்வு நிறுவனம், நீரியல் (ம) தரக்கட்டுப்பாடு, நீஆது., தரமணி, சென்னை-113 அவர்களின் செயல்முறை ஆணை எண்.நிஎ1/மறுபணியமர்வு/2020/ நாள்:25.09.2020
4. இவ்வலுவலக செ.மு.எண்.நிஎ1/கோ.மறுபணியமர்வு/2020/நாள்:25.09.2020
5. உதவி செயற்பொறியாளர், நீஆது., பொபது., தரக்கட்டுப்பாடு உபகோட்டம் அவர்களின் கடித எண்:உசெபொ/2021/நாள்:25.10.2021

*****

பார்வை 1-ல் காணும் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு, பார்வை-2-ல் காணும் முதன்மை தலைமைப்பொறியாளர், நீஆது., மற்றும் தலைமைப்பொறியாளர், (பொது) பொபது., சென்னை-5 அவர்களின் ஆணையின்படி இக்கோட்ட கட்டுப்பாட்டிலுள்ள தரக்கட்டுப்பாடு உபகோட்டம் விழுப்புரம் அலுவலகத்திற்கு செல்வி.G.அருள்ஜோதி இளநிலை உதவியாளர் பதவிக்கு பணியமர்வு செய்யப்பட்டு 28.09.2020 மு.ப இளநிலை உதவியாளராக பணியேற்று பணிபுரிந்து வருகிறார்.

2. இவருக்கு தமிழ்நாடு அரசுப்பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 14/2016-ன் படி இளநிலை உதவியாளராக அவர் பணியில் சேர்ந்த நாளான 28.09.2020 மு.ப முதல் பணிவரன் முறை செய்தும், இவரது தகுதிகாண் பருவத்தை மூன்றாண்டு தொடர் பணிகாலத்தில் இரண்டாண்டு காலத்தை இவர் பணியில் சேர்ந்த நாள் முதல் துவக்கியும் இதன் மூலம் ஆணை வழங்கப்படுகிறது. இவர் தகுதிகாண்பருவகாலத்தில் பவானிசாகர் அடிப்படைப் பயிற்சியில் தேர்ச்சி பெற வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

3. பார்வை 2-ல் காணும் முதன்மை தலைமைப்பொறியாளர், நீஆது., (ம) தலைமைப்பொறியாளர் (பொது) பொ.ப.து., சேப்பாக்கம், சென்னை-5 அவர்களின் ஆணையில் குறிப்பிட்டுள்ளபடி, இவ்வாணை சென்னை உயர்நீதி மன்றம் மற்றும் சென்னை உயர் நீதிமன்ற மதுரைக் கிளையில் தொடுக்கப்பட்டுள்ள வழக்குகளில் வழங்கப்பட உள்ள தீர்ப்புக்கு உட்பட்டது என்கிற நிபந்தனையுடன் இவ்வாணை வழங்கப்படுகிறது.

செயற்பொறியாளர், பொபது.,
தரக்கட்டுப்பாடு கோட்டம்,நீஆது.,
விழுப்புரம்.

பெறுநர்:G.அருள்ஜோதி, இளநிலை உதவியாளர்
(வழி) உதவி செயற்பொறியாளர், பொபது., தரக்கட்டுப்பாடு உபகோட்டம், நீஆது., விழுப்புரம்

நகல்: உதவி செயற்பொறியாளர், பொபது., தரக்கட்டுப்பாடு உபகோட்டம், நீஆது., விழுப்புரம் அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பப்படுகிறது.

D:Proceedings